**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண்.** 96 **நாள்:** 16.04.2026

**தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திலுள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளில், 85 வயதிற்கு மேற்பட்டோர் மற்றும் வரையறுக்கப்பட்ட மாற்றுத்திறன் கொண்ட வாக்காளர்கள் வீட்டிலிருந்தபடியே வாக்களிப்பதற்கான தபால் வாக்குப்பதிவு இன்று** (16.04.2026) **தொடங்கி நடைபெற்றது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்-2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் 85 வயதிற்கு மேற்பட்ட மூத்த வாக்காளர்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கு படிவம்-12D வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் வழங்கப்பட்டது. அதில் வீட்டிலேயே வாக்களிக்க விருப்பம் தெரிவித்த 85 வயதிற்கு மேற்பட்ட 8119 மூத்த வாக்காளர்கள், 828 மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் என மொத்தம் 8,947 வாக்காளர்களுக்கு வீட்டிலேயே வாக்குப்பதிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, வீட்டிலிருந்தபடியே வாக்களிக்க விருப்பம் தெரிவித்த 85 வயதிற்கும் மேற்பட்ட மூத்த வாக்காளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கான தபால் வாக்குப்பதிவு இன்று (16.04.2026) தொடங்கியது. தொடர்ந்து இந்த வாக்குப்பதிவானது 17.04.2026 மற்றும் 18.04.2026 ஆகிய இந்த மூன்று நாட்களிலும் காலை 9 மணி முதல் தொடங்கி மாலை 5 மணி வரை நடைபெறுகிறது. இப்பணியில் 96 நிலையான வாக்குப்பதிவு குழுக்கள் மற்றும் 4 ரிசர்வ் குழுக்கள் என மொத்தம் 100 வாக்குப்பதிவு குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இக்குழுவில் வாக்குப்பதிவு அலுவலர் 1 மற்றும் 2, காவலர், வீடியோ ஒளிப்பதிவாளர், நுண் பார்வையாளர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

**“ தேர்தல் திருவிழா – தமிழ்நாட்டின் பெருவிழா ”**

**செய்தி வெளியீடு** : **இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**